ALL INDIA RADIO - TIRUCHIRAPPALLI

# மாநிலச் செய்திகள்

நேரம்: 01.45 pm

10.10.2023

தலைப்புச்செய்திகள்

- பிரதமர் திரு.நரேந்திரமோதி ஆசிய விளையாட்டு போட்டிகளில் பங்கேற்ற இந்திய வீர வீராங்கனை குழுவினருடன் புதுதில்லியில் இன்று மாலை கலந்துரையாடுகிறார்.
- மத்திய நிதியமைச்சர் திருமதி நிர்மலா சீதாராமன் உலக வங்கி மற்றும் சர்வதேச நிதியத்தின் வருடாந்திர கூட்டங்களில் கலந்துகொள்வதற்காக இன்று மொராக்கோ சென்றுள்ளார்.
- தமிழ்நாட்டில் சிறு வணிகர்களின் நலன் காக்கும் புதிய வரி நிலுவைத்தொகை சமாதான திட்டம் செயல்படுத்தப்படும் என்று முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அறிவித்திருக்கிறார்.
- மேட்டூர் அணையிலிருந்து டெல்டா பாசனத்திற்காக தண்ணீர் திறக்கப்படுவது இன்று நிறுத்தப்பட்டது.
- ஷாங்காய் மாஸ்டர்ஸ் டென்னிஸ் ஆடவர் இரட்டையர் காலிறுதிக்கு முந்தய சுற்றில் ரோஹன் போபண்ணா - எப்டன் இணை இன்று களமிறங்குகிறது.

இனி விரிவான செய்திகள்

**********

பிரதமர்

பிரதமர் திரு.நரேந்திரமோதி ஆசிய விளையாட்டு போட்டிகளில் பங்கேற்ற இந்திய வீர வீராங்கனை குழுவினருடன் புதுதில்லியில் இன்று மாலை கலந்துரையாடுகிறார்.

ஆசிய விளையாட்டு போட்டிகளில் அரும்பெரும் சாதனைகளை படைத்த வீரர்களை கவுரவிக்கும் பிரதமர், எதிர்காலத்தில் மேலும் பல போட்டிகளில் பங்கேற்று சாதனைகளை படைக்கும் வகையில் அவர்களிடையே உரையாற்றுகிறார்.

கடந்த ஞாயிற்றுக்கிழமை முடிவடைந்த ஆசிய விளையாட்டு போட்டிகளில் இந்தியா 28 தங்கம் உட்பட 107 பதக்கங்களை குவித்து சாதனை படைத்தது.

பிரதமரின் இந்த கலந்துரையாடல் நிகழ்வின்போது தடகள வீரர்களின் பயிற்சியாளர்கள், இந்திய ஒலிம்பிக் கழகத்தின் உயர் அதிகாரிகள், தேசிய விளையாட்டு கூட்டமைப்பின் பிரதிநிதிகள் உள்ளிட்டோர் பங்கேற்கின்றனர்.

**********

சீதாராமன்

மத்திய நிதியமைச்சர் திருமதி நிர்மலா சீதாராமன் உலக வங்கி மற்றும் சர்வதேச நிதியத்தின் வருடாந்திர கூட்டங்களில் கலந்துகொள்வதற்காக இன்று மொராக்கோ புறப்பட்டு சென்றார்.

இந்த கூட்டங்களில் பல்வேறு நாடுகளின் நிதியமைச்சர்களும், மத்திய வங்கி தலைவர்களும், பங்கேற்கின்றனர்.

தொடர்ந்து அங்கு நடைபெறும் 4-ஆவது ஜி-20 நிதிசார்ந்த கூட்டத்திலும் திருமதி நிர்மலா சீதாராமனும், ரிசர்வ் வங்கி ஆளுநர் திரு.சக்தி காந்ததாஸும் பங்கேற்று நிதிசார்ந்த கொள்கைகள் குறித்து விவாதிக்கின்றனர்.

**********

முதலமைச்சர் 110

தமிழ்நாட்டில் சிறு வணிகர்களின் நலன் காக்கும் புதிய வரி நிலுவைத்தொகை சமாதான திட்டம் செயல்படுத்தப்படும் என்று முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அறிவித்திருக்கிறார்.

சட்டப்பேரவையில் அவை விதி 110ன் கீழ் இன்று அறிக்கை தாக்கல் செய்து பேசிய அவர், இதன்படி வரி மதிப்பீட்டு ஆண்டில், 50 ஆயிரம் ரூபாய்க்கு குறைவாக, வரி, வட்டி அபராத தொகை செலுத்த வேண்டிய சிறு வணிகர்களுக்கு நிலுவை தொகையானது முற்றிலும் தள்ளுபடி செய்யப்படும் என்று கூறியிருக்கிறார்.

வாய்ஸ்

தமிழக வரலாற்றில் சிறு வணிகர்களுக்கு இவ்வாறு வரி நிலுவை தள்ளுபடி செய்வது இதுவே முதல் முறை என்றும் முதலமைச்சர் கூறினார்.

இதன்மூலம் 95 ஆயிரத்து 502 சிறு வணிகர்கள் பலனடைவார்கள் என்றார்.

மேலும் 50 ஆயிரம் ரூபாய் முதல் 10 லட்சம் ரூபாய் வரை நிலுவை உள்ளவர்கள் 20 விழுக்காட்டை செலுத்தி வழக்கிலிருந்து வெளிவரலாம் என்றும் அவர் அறிவித்தார்.

10 லட்சம் முதல் ஒருகோடி ரூபாய் வரையிலும்,

ஒரு கோடி முதல் 10 கோடி வரையிலும்,

10 கோடிக்கு மேலும் நிலுவையில் உள்ளவர்களும் பயன்பெறும் வகையில் இந்த திட்டம் வடிவமைக்கப்பட்டிருப்பதாக கூறினார்.

இந்த சமாதான திட்டம் இம்மாதம் 16 ஆம் தேதிமுதல் நடைமுறைக்கு வரும் என்றும், வரும் பிப்ரவரி 15ஆம் தேதிவரை இது நடைமுறையில் இருக்கும் என்றும் முதலமைச்சர் தெரிவித்தார்.

இந்த முன்னோடி முயற்சியை வணிகர்கள் முழுமையாக பயன்படுத்திக்கொள்வதோடு, அரசுக்கு சேர வேண்டிய வருவாயை அளித்து தொழில் வளம்பெற கேட்டுக்கொண்டார்.

**********

முதலமைச்சர் கவன ஈர்ப்பு சிறை

பேரறிஞர் அண்ணாவின் 115 ஆவது பிறந்த நாளை முன்னிட்டு ஆளுநரின் ஒப்புதல் பெறப்பட்ட பின்னர் சிறையில் உள்ள தகுதியான 49 ஆயுள் தண்டனை கைதிகள் விடுதலை செய்யப்படுவார்கள் என்று முதலமைச்சர் தெரிவித்தார்.

சட்டப்பேரவையில் எதிர்கட்சி தலைவர் திரு.எடப்பாடி கே.பழனிச்சாமி கொண்டு வந்த சிறப்பு கவன ஈர்ப்பிற்கு பதில் அளித்து பேசிய அவர் இதில் 20 பேர் இஸ்லாமியர்கள் என்று சுட்டிக்காட்டினார்.

இவ்விசயத்தில் தமிழக அரசு முறைப்படி சட்ட ரீதியான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதாகவும் குறிப்பிட்டார்.

**********

கவன ஈர்ப்பு தீர்மானம்

தமிழ்நாட்டில் இனி பட்டாசு வெடி விபத்துகள் நடைபெறாமல் தடுப்பதற்குரிய பாதுகாப்பு நடவடிக்கைகளை மாநில அரசு தீவிரமாக மேற்கொள்ளும் என்று மாநில வருவாய் துறை அமைச்சர் திரு.கே.கே.எஸ்.எஸ்.ஆர். ராமசந்திரன் தெரிவித்திருக்கிறார்.

சட்டப்பேரவையில் அண்மையில் கர்நாடக மாநில எல்லை பகுதியிலும், நேற்று அரியலூர் பகுதியிலும் நடைபெற்ற வெடிவிபத்து குறித்த கவன ஈர்ப்பு தீர்மானத்திற்கு பதில் அளிக்கையில் அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார்.

இந்த விபத்துகள் நடைபெற்ற உடனேயே அமைச்சர்கள் மற்றும் அதிகாரிகளை அனுப்பி உரிய நிவாரண நடவடிக்கைகளை மேற்கொள்ள முதலமைச்சர் உத்தரவிட்டதன் அடிப்படையில் அதற்கான பணிகள் விரைவாக நடைபெற்றதாக கூறினார்.

விபத்தில் உயிரிழந்தவர்கள் மற்றும் காயமடைந்தவர்களுக்கு உரிய நிவாரணம் வழங்கப்பட்டதையும் அவர் சுட்டிக்காட்டினார்.

விருதுநகர் மாவட்டம் சிவகாசி பகுதியில் மட்டுமே முன்பு பட்டாசு ஆலைகள் இருந்த நிலை மாறி தற்போது எல்லா மாவட்டங்களிலும் பட்டாசு தயாரிக்கும் உரிமம் பெற்று போதிய அனுபவம் இல்லாதவர்களை வைத்தும், அதிக தொழிலாளர்களை வைத்தும் பட்டாசுகளை தயாரிப்பதால் தான் தவறுதலாக இதுபோன்ற வெடி விபத்துகள் ஏற்படுவதாகவும் அவர் கூறினார்.

இதனை முழுமையாக தடுப்பதற்கு தலைமை செயலாளர் தலைமையில் சிறப்பு குழுவும் மாவட்ட ஆட்சியர்கள் தலைமையில் தனி குழுக்களும் ஏற்படுத்தப்பட்டு அவ்வப்போது ஆய்வுகள் செய்து பாதுகாப்பு நடவடிக்கைகளை அரசு மேற்கொண்டு வருவதாகவும், அமைச்சர் தெரிவித்தார்.

**********

கேள்விநேரம்

தமிழ்நாட்டின் பல்வேறு பகுதிகளில் பழுதடைந்துள்ள வருவாய் துறை அலுவலக கட்டிடங்களுக்கு பதிலாக முன்னுரிமை அடிப்படையில் படிப்படியாக புதிய கட்டிடங்கள் கட்டித்தரப்படும் என்று மாநில வருவாய் துறை அமைச்சர் திரு.கே.கே.எஸ்.எஸ்.ஆர் ராமசந்திரன் தெரிவித்துள்ளார்.

சட்டப்பேரவையில் இன்று கேள்வி நேரத்தின்போது இதனை தெரிவித்த அவர், திண்டிவனம் தொகுதி ஒலக்கூரில் உள்ள வருவாய் ஆய்வாளர் அலுவலகத்திற்கு இந்தாண்டு புதிய கட்டிடம் கட்டித்தரப்படும் என்றார்.

தமிழ்நாட்டின் பல்வேறு பகுதிகளில் வீட்டுவசதி வாரியம் மூலம் கட்டப்பட்ட வீடுகள் விற்காமல் பழுதடைந்து இடிக்கப்படும் சூழலில் இருப்பதால் இனி தேவைக்கேற்ப மட்டுமே புதிய வீடுகள் கட்டப்படும் என்று மாநில வீட்டுவசதித்துறை அமைச்சர் திரு.முத்துசாமி கூறியிருக்கிறார்.

உடுமலை பேட்டை பகுதியில் 101 வீடுகள் கட்டப்பட்டு பல ஆண்டுகளாகியும் விற்கப்படாததால் அதை இடிக்கும் நிலை உருவாகியிருப்பதாக அவர் சுட்டிக்காட்டினார்.

சட்டப்பேரவையில் கேள்வி நேரத்தின்போது வெளியான மேலும் சில அறிவிப்புகள்

பணிபுரியும் மகளிருக்கான தோழி விடுதிகள் தற்போது, திருச்சி, சென்னை-பரங்கிமலை தாம்பரம், கூடுவாஞ்சேரி உள்ளிட்ட பகுதிகளில் கட்டப்பட்டு வருவதாக மாநில சமூக நலத்துறை அமைச்சர் திருமதி கீதா ஜீவன் தெரிவித்துள்ளார்.

வந்தவாசி பகுதியில் பாய் நெசவாளர்கள் புதிய சங்கம் ஒன்றை உருவாக்கி தொழிற்கூடம் அமைப்பதற்கான இடத்தையும் தேர்வு செய்து அரசிடம் தெரிவித்தால், பாய் உற்பத்தி தொழிற்கூடம் அமைக்கப்படும் என்று மாநில பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் திரு.ராஜகண்ணப்பன் கூறியிருக்கிறார்.

பாய் நெசவில் ஈடுபடுபவர்களுக்கும் இலவச மின்சாரம் வழங்குவது குறித்து கலந்தாலோசனைக்குப்பின் அரசு முடிவெடுக்கும் என்றார்.

தமிழ்நாட்டில் தற்போது 2 ஆயிரத்து 608 மெட்ரிக் டன் மருத்துவ ஆக்ஸிஜன் தயாரிக்கும் நிலை உருவாகியிருப்பதாக மாநில மருத்துவம் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் திரு.மா.சுப்பிரமணியன் தெரிவித்துள்ளார்.

மாவட்ட தலைமை மருத்துவக்கல்லூரி மருத்துவமனைகளில் மட்டுமே ஆக்ஸிஜன் ஜெனரேட்டர் வசதி வழங்கப்படுவதை அவர் சுட்டிக்காட்டினார்.

**********

மேட்டூர்

மேட்டூர் அணையிலிருந்து டெல்டா பாசனத்திற்காக தண்ணீர் திறக்கப்படுவது இன்று காலை 6 மணி முதல் நிறுத்தப்பட்டது.

அணையின் நீர்மட்டம் தொடர்ந்து சரிந்து வருவதால் இந்நடவடிக்கை என்று எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

வாய்ஸ்

**********

ஒத்திகை

கன்னியாகுமரி கடலோர எல்லையில் சாகர் கவாச் எனப்படும் பாதுகாப்பு ஒத்திகை இன்று தொடங்கியது.

ஆரோக்கியபுரம் முதல் நீரோடி வரை உள்ள கடல் மற்றும் கடற்கரை கிராமங்களில் இந்த ஒத்திகை நடைபெறுகிறது.

இலக்குகளை பாதுகாத்தல், கடலோரங்களில் உளவு சேகரித்தல், ஊடுருவல்களை தடுத்தல், வெடிபொருட்களை கண்டறிதல் உள்ளிட்டவை இதில் அடங்கும்.

ராமேஸ்வரத்திலும் கடல் வழியாக தீவிரவாதிகளின் ஊடுருவலை தடுக்கும் ஒத்திகை பயிற்சி இன்று நடைபெற்றது.

ராமேஸ்வரம், பாம்பன், மண்டபம், தனுஷ்கோடி உள்ளிட்ட கடல் பகுதிகளில் இந்த பாதுகாப்பு ஒத்திகை நிகழ்ச்சிகளை காவல்துறையினர் மேற்கொண்டனர்.

**********

மன நல தினம்

உலக மன நல தினம் இன்று கடைபிடிக்கப்படுகிறது.

“மன ஆரோக்கியம் உலகளாவிய மனித உரிமை” என்பதே இந்தாண்டின் கருப்பொருளாகும்.

இந்நாளை ஒட்டி திருச்சி மாவட்ட ஆட்சித்தலைவர் அலுவலகத்தில், மன நல விழிப்புணர்வு பேரணியை துவக்கிவைத்து பேசிய மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.மா.பிரதீப்குமார் சமூக வலைதளங்களில் மூழ்கியிருக்கும் இளைய தலைமுறையினரை வெளிக்கொணர்வதன் அவசியத்தை வலியுறுத்தினார்.

வாய்ஸ்

நெல்லை மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைகழகம் சார்பில் நடைபெற்ற மன நல சைக்கிள் பேரணியில் உளவியல் துறை மாணாக்கர் பேரணியாக சென்று விழிப்புணர்வு ஏற்படுத்தினர்.

**********

திருப்பத்தூர்

திருப்பத்தூர் மாவட்டத்தில் பிரதமரின் தேசிய தொழில் பழகுனர் பயிற்சி மூலம் இளைஞர்கள் உதவிதொகையுடன் கூடிய தொழிற்பயிற்சி பெற்று

பயனடையலாம் என மாவட்ட திறன் மேம்பாட்டு பயிற்சி நிறுவன உதவி இயக்குனர் திரு.பன்னீர்செல்வம் தெரிவிக்கிறார்.

வாய்ஸ்

**********

தூத்துக்குடி

தூத்துக்குடியில் சீர்மிகு நகர திட்டத்தின் கீழ் புதிதாக கட்டப்பட்டுள்ள பேருந்து நிலையத்திலிருந்து நாளைமுதல் பேருந்துகள் இயக்கப்படும் என்று மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.செந்தில்ராஜ் தெரிவித்துள்ளார்.

தூத்துக்குடியில் இன்று செய்தியாளர்களிடம் பேசிய அவர் முதற்கட்டமாக திருநெல்வேலி -திருச்செந்தூருக்கு பேருந்துகள் இயக்கப்படும் என்றார்.

மினி பேருந்துகள் தற்காலிக பேருந்து நிலையத்திலிருந்து புறப்படும் என்றும் அவர் கூறினார்.

முன்னதாக இந்த பேருந்து நிலையத்தை அவர் ஆய்வு செய்தார்.

**********

இருவரி

பெரம்பலூர் மாவட்டத்தில் திருக்குறள் முற்றோதல் பாராட்டு பரிசு திட்டத்தில் பங்கேற்க விரும்பும் மாணாக்கர் அடுத்த மாதம் 30ஆம் தேதிக்குள் விண்ணப்பிக்குமாறு ஆட்சித்தலைவர் திருமதி கற்பகம் தெரிவித்துள்ளார்.

இம்மாவட்டத்தில் அதரவற்ற குழந்தைகளுக்கான தஞ்சை சுற்றுலா வாகன பயணத்தை அவர் கொடியசைத்து துவக்கிவைத்தார்.

தர்மபுரி மாவட்டத்தில் பின்தங்கிய பகுதி அரசு பள்ளி மாணாக்கருக்கான உள்ளூர் சுற்றுலாவை ஆட்சித்தலைவர் திருமதி சாந்தி துவக்கிவைத்தார்.

**********

கோவில்

பழனி அருள்மிகு தண்டாயுதபாணி சுவாமி திருக்கோவிலில் நவராத்திரி விழாவை ஒட்டி வரும் 15ஆம் தேதிமுதல் 23 ஆம் தேதிவரை தங்கரத புறப்பாடு ரத்து செய்யப்பட்டுள்ளதாக கோவில் நிர்வாகம் அறிவித்துள்ளது.

வரும் 24 ஆம் தேதிமுதல் இது வழக்கம்போல் நடைபெறும் என்றும் தெரிவித்தார்.

**********

வானிலை

வளிமண்டல கீழடுக்கு சுழற்சி காரணமாக கோவை நீலகிரி திருப்பூர் ஈரோடு கிருஷ்ணகிரி தர்மபுரி திருப்பத்தூர் வேலூர் சேலம் நாமக்கல் திருச்சி, கரூர் திண்டுக்கல் மதுரை தேனி மாவட்டங்களில் இன்று கன

மழைக்கு வாய்ப்பிருப்பதாக சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

லட்சதீவு பகுதிகளில் பலத்த சூறாவளிக்காற்று வீசக்கூடும் என்பதால் மீனவர்கள் இன்று இப்பகுதிகளுக்கு செல்ல வேண்டாம் என்று அறிவுறுத்தப்படுகின்றனர்.

**********

டென்னிஸ்

சீனாவில் நடைபெறும் ஷாங்காய் மாஸ்டர்ஸ் டென்னிஸ் போட்டியின் ஆடவர் இரட்டையர் காலிறுதிக்கு முந்தய சுற்றில் இந்தியாவின் ரோஹன் போபண்ணா – ஆஸ்திரேலியாவின் எப்டன் இணை - ரஷ்யாவின் Khachanov, Rublev இணையை இன்று பிற்பகல் எதிர்கொள்கிறது.

**********

கிரிக்கெட்

தரம்சாலாவில் பங்களாதேஷிற்கு எதிரான ஐ.சி.சி உலக கோப்பை ஒரு நாள் சர்வதேச கிரிக்கெட் போட்டியில் இங்கிலாந்து சற்றுமுன் 43 ஓவரில் 5 விக்கெட் இழப்பிற்கு 312 ரன் எடுத்திருந்தது.

ஹைதராபாத்தில் நடைபெறும் பாகிஸ்தானுக்கு எதிரான மற்றொரு போட்டியில் டாஸ் வென்ற இலங்கை முதலில் பேட் செய்ய தீர்மானித்தது.

இன்னும் சற்று நேரத்தில் இந்த ஆட்டம் தொடங்குகிறது.

**********

இத்துடன் இந்த செய்தியறிக்கை முடிவடைந்தது

**********